பக்கங்கள் எட்டு
Registered as a Newspaper
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 18 வெள்ளிக்கிழமை (02-07-1993) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 216

# ஈழ அகதிகள் அடுத்த மாதம் முதல் மீண்டும் திருப்பி அனுப்பப்படுவர்

## ஐக்கிய நாடுகள் தூதரகத்துடன் இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்து

புதுடில்லி, ஜூலை 2

கடந்த சில காலமாக இடை நிறுத்தப்பட்டிருந்த ஈழ அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை மீண்டும் அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக புதுடில்லியில் உள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகளில் தாயகம் திரும்ப விரும்புவர்களை ஏற்றி வருவதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இரண்டு கப்பல்களைப் பயன் படுத்த உள்ளது.

ஆகஸ்ட் 15 இல் சென்னையில் இருந்து புறப்படும் முதலாவது கப்பலில் 400 அகதிகளும் இராமேஸ்வரத்தில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஐ. நா. தூதரக அதிகாரிகள் விஜயம்:

## கேரதீவு இறங்குதுறைப் பகுதி அழிந்து மோசமான நிலையில்

### "பாதைகள்" இரண்டும் கட்டடங்களும் சேதம்

கேரதீவு இறங்கு துறைப் பகுதி சேதமடைந்து மிகவும் மோசமாக — பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. அங்கிருந்த சில கட்டடங்கள் தரைமட்டமாகக் கிடக்கின்றன. கடல் போக்குவரத்துக்கு பாவிக்கப்பட்ட 'பாதைகள்' இரண்டும் சேதமடைந்து, கறள் பிடித்து, உருக்குலைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. கேரதீவுக்கான வீதியும் ஆங்காங்கே சேதமடைந்து காணப்படுகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரும் புலிகள் தினம் விடுமுறை நாள்

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை கரும் புலிகள் தினம் ஆகும்.

இதனையொட்டி அன்றைய தினம், வர்த்தக நிறுவனங்கள், அரசாங்க திணைக்களங்கள் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும்.

## மிதிவெடியை கல்லால் குத்தியவர் மரணம்

### மற்றும் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நிலத்தில் அரைவாசி புதைந்திருந்த ஒரு பொருளை [மிதிவெடி] எடுத்து கல்லால் குத்திப்பார்த்தபோது அப்பொருள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்தது. கல்லால் குத்திய சிறுவன் அதே இடத்தில் உடல் சிதறி மரணமானார்.

அருகில் நின்ற மற்றும் இரு சிறுவர்கள் காயம் அடைந்தனர்.

உடுத்துறையில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செல்வம் சதீஸ் வயது 16) என்ற மாணவனே மரணமானார்.

இவருடன் கூடச்சென்ற இவரது சகோதரன் செல்வம் சுரேஷ் வயது 9) மற்றும் பொன்னுச்சாமி பிரேமதாஸன் (வயது 12) காயம் அடைந்தவர்கள் ஆவர்.

ஒரே பாடசாலையில் கல்வி கற்கும் இம் மூவரும் பாடசாலையால் வந்து வீட்டிலிருந்து சுமார் அரை மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்துக்கு குருவி பிடித்து விளையாடச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## வாசகர்களே!

நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது. அதனையொட்டி உள்ளே இரண்டு பக்க சிறப்பு மலர் பிரசுரமாகியுள்ளது. சிறப்பு மலரின் அனுபந்தமாக ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வர்ணப்படம் உதயனுடன் விநியோகிக்கப்படுகிறது.

நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்பாளின் வர்ணப் படத்தை விற்பனையாளரிடம் கேட்டு வாங்குங்கள்.

நேற்று முதல் 30 சதவீத அதிகரிப்பு

## மின்சாரக் கட்டண உயர்வுக்கு உலக வங்கியே காரணம்

### மின்சார சபைத் தலைவர் குற்றச்சாட்டு

நேற்று முதல் நாடு முழுவதும் மின்சாரக் கட்டணம் 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் விட்டுக்கொண்டதுக்கிணங்க மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாக மின்சார சபைத் தலைவர் எம். கே. ஜே பெரேரா பி.பி.சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டண அதிகரிப்பு செய்யாவிடில் இலங்கைக்கு மின்சார அபிவிருத்திக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாது என உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் அச்சுறுத்தி இருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே மின்சார சபை நட்டத்தில் இயங்கிவருவதாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

(இ-6)

அரசு செஞ்சிலுவைச் சங்கத்திடம்

## கைதிகளின் உறவினர்களை அழைத்து வரக் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்களை கொழும்புக்கு அழைத்து வர ஏற்பாடுகளைச் செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை அரசு கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளின் 78 உறவினர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கடந்த மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் அழைத்து வந்திருந்தனர்.

அவர்களில் 41 உறவினர்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ளனர்.

யுத்தக் கைதிகளின் விடுதலை குறித்து முடிவு வரும் வரை தாம் கொழும்பு திரும்ப விரும்பவில்லை என்று உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

(ஒ-3)

யுத்தக் கைதிகள் விவகாரம்:

## செஞ்சிலுவை சர்வதேச குழு இருதரப்புடனும் தொடர்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளின் விவகாரம் குறித்து விடுதலைப் புலிகளுடனும், அரசுடனும் தினமும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு தொடர்பு கொண்டுவருவதாக அறியவருகிறது.

யுத்தக்கைதிகள் விடயமாக இருபகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட தடங்கல் நிலையை அடுத்து இனி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து இரு பகுதியினருடனும் செஞ்சிலுவைச்சங்கம் பேச்சு நடத்தி வருகின்றது.

(ஒ 3)

## அராலிப் பகுதி மக்கள் மீண்டும் மறியற் போர்

அராலி, ஜூலை 2

அராலிப் பகுதியை சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் நேற்று தமது மறியல் போராட்டத்தை வலி-மேற்கு பிரதேச செயலகத்தின் முன்னால் ஆரம்பித்தனர்.

நிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு கோரியே அவர்கள் மறியல் போராட்டம் ஆரம்பித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் மாட்டு வண்டில்களிலும், கால்நடையாகவும் அதிகாலையிலிருந்து வந்து பிரதேச சபை செயலகக் கட்டடத்தின் முன்னால் மறியல் போராட்டத்தை ஆரம்பித்தனர். மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் அனேகமானோர் பெண்கள். அவர்களில் பலரும் தமது கைக்குழந்தைகளுடன் வந்திருந்தனர்.

மறியல் போராட்டம் காரணமாக வலி மேற்கு பிரதேச செயலகம் நேற்று முற்றாகச் செயலிழந்திருந்தது.

அராலியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து கடந்த மாதம் 23ஆம் திகதியும் மறியல் போராட்டம் செய்திருந்தார்.

அதிகாரிகள் ஒருவார அவகாசம் கேட்டதை அடுத்து மறியல் போராட்டத்தைக் கைவிட்டனர்.

உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்க முடியாது என்றும் வறுமை நிவாரண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரப்பனின் சகாக்கள் ஐவர் சுட்டுக்கொலை

பெங்களூர், ஜூலை 2

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த ஐந்து பேரை கர்நாடக அதிரடிப் படையினர் நேற்று சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் வீரப்பன் ஒளிந்துள்ள மலைப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவதை அதிரடிப் படையினர் அவதானித்து, அவர்களை நிற்கும்படி உத்தரவிட்டதாகவும்—

அப்போது அக்கும்பல் பொலீஸாரை நோக்கிச் சுட ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் வைத்து இருந்த ஆறு துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் அதிரடிப்படையினர் கைப்பற்றினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் ஆனி மாதம் 20ஆம் நாள் 04 7-93) ஞாயிற்றுக்கிழமை பூராட நட்சத்திரமும் சித்த அமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.39 மணிமுதல் 8.51 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

திரு. திருமதி நல்லதம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் **அருள்முருகானந்தவடிவேல்** அவர்கட்கும்

திரு. திருமதி ஏரம்பமூர்த்தி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி **நிரந்தினி** அவர்கட்கும்

திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் புரிய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சிவபாலசுப்பிரமணியம்
(தொண்டர், வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை)
செல்வி சின்னத்தம்பி (பன்னாலை)

திரு. திருமதி ஏரம்பமூர்த்தி
குடும்பத்தினர்
(பன்னாலை)

விலாசம்;-
GRONVANG 17 2T, V: 6580 VAMDRUP, DENMARK.

(5982)

# திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆனித்திங்கள் 20 ஆம் நாள் (04-07-93) ஞாயிறு காலை 6 00 — 8.00 வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

திருநிறை செல்வன் **க. வை. கனகேஸ்வரன்** ஊரெழு/உரும்பராய் ப. சபை அவர்களுக்கும்

திருநிறை செல்வி **சிவபாக்கியம்** ஆயுள்வேத வைத்தியர் அவர்களுக்கும்

ஆவரங்கால் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு க. வை. தினேஸ்வரன்
குடும்பத்தினர்
''கலையகம்''
கோண்டாவில்.

திருமதி சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
சிவன்கோவில் வீதி,
ஆவரங்கால்.

(இரு வீட்டார் அழைப்பு)

(சி/5348)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும்

# முழுநிலா நாள் அறிவியல் அரங்கு

3-7 93 சனிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

**3 00 — 4.00** மணி
''யூகோசிலாவியாவின் உடைவும் அது ஏற்படுத்தியுள்ள அரசியல் பிரச்சினைகளும்''
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

**4 00 — 5.00** மணி
''சிந்துவெளி நாகரிகம் - ஓர் இந்துப் பண்பாட்டு நோக்கு''
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


பாலசுப்பிரமணியம் தவபாலன்
(செயலர்)

(சி/5424)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 09 — 1967

மறைவு: 25 — 06 — 1991



## செல்வி தர்சனா குமாரசாமி

(ஆசிரியை, ஆ. த. க. பாடசாலை - தர்மக்கேணி)

திதி: 02 — 07 — 1993

பாரை விட்டு நீ பறந்து இரண்டு ஆண்டுகளே-எம்
பார்வை விட்டு எங்கு சென்றாய் பாச ரதியே-நாம்
ஊரில் சிறந்திருந்தோம் நீ இருந்த வேளையிலே-நீ
உலகை விட்டு போவாயென்று உணரவில்லை
ஒளி நிலவே - நீ
உலகை விட்டு செல்ல நாம் ஊரை விட்டு சென்றோமே
ஊரை விட்டு சென்று நாம் உறங்கவில்லை
உம் நினைவால்...... ..

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

பெரிய பளை,
பளை.

(26320)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

மலர்வு: 15 — 02 — 1930



உதிர்வு: 02 — 06 — 1993

அமரர்

## முருகேசபிள்ளை சின்னராஜா

[நயினாதீவு]

பாசத்தின் உறைவிடமே! எமையெல்லாம்
நேசித்து வளர்த்த அன்புத் தெய்வமே!!
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி - நீங்கள்
மீளாத் துயில் கொண்டு மாதம் ஒன்று கடந்ததுவோ!
உங்கள் நினைவு என்றென்றும்
எமை விட்டகலாது, ஆருயிர்த் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி - இன்று
தேரேறிவரும் எம் குல தெய்வமாம்
நயினை ஸ்ரீ நாகபூஷணி அன்னையை
பாதம் பணிந்து இறைஞ்சுகிறேம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எம் குடும்பத் தலைவரின் பேரிழப்பை அறிந்ததும் எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மற்றும் பல வழிகளிலும் எமக்குப் பேருதவி அளித்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி.

ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காரைநகர் வீதி,
194 A, வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(6305)

# நாளை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

o o o

யாழ்ப்பாணம், ஜூலை 2

''உளச் சுகாதாரத்தின் முக்கியத்துவம்'', பற்றிய கருத்தரங்கு நாளை சனி காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ் மருத்துவ பீட டாக்டர் ஆர். சிவசங்கர் கருத்துரை வழங்குவார். (இ-18-162)

# சிரித்திரன் வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 2

சிரித்திரன் சஞ்சிகையின் ஜூன் மாத இதழ் வெளிவந்துள்ளது. வழமையான அம்சங்களுடன் புதிய பல விடயங்களும் இம்மாத இதழில் இடம் பெற்றுள்ளன. (த)

SCIENCE COLLEGE
பெருமாள் கோவிலடி
அருகாமை
95 A/L
PURE - APP
திரு. குணசிங்கம்
B. Sc (Hons)
ZOO
திரு. இ. ஈஸ்வரதாசன்
B Sc (Cey), Dip - in - Ed
(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)
(C/5423)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 22 — 07 — 1929

விண்ணில்: 03 — 06 — 1993

அமரர்

## மை. ஜோ. அ. இராசதுரை

(இளைப்பாறிய ஆசிரியர்,
உத்தரியமாதா கோவிலடி, வசாவிளான்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், உயிர் மூச்சாய், பாசமிகு தந்தையாய் விளங்கி, அவனியில் எம்மை அரிய இடத்தில் அமர்த்திவிட்டு எம்மை விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வத்திற்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக, சுண்டுக்குளி புனித சின்னத் திரேசாள் தேவாலயத்தில் நாளை (03-07-1993) சனிக்கிழமை காலை 6-15மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்களை இத் திருப்பலியில் கலந்து, இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

அவர்தம் நினைவுகளில் வாழும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், உறவினர்கள்.

20, எசக்கிமுத்து பிளேஸ்,
பிக்கறிங்ஸ் றோட்,
கொழும்பு - 13.

(26321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா விமான நிலையத்துக்கென

# சுவீகரிக்கப்பட்ட காணிகளிலிருந்து தமிழ் மக்களை வெளியேற பணிப்பு

வவுனியா, ஜூலை 2

வவுனியா விமானத் தளத்திற்காக சுவீகரிக்கப்பட்ட நிலப் பகுதியின் வட கிழக்குப் பகுதியில் உள்ள கோயில் புதுக்குளம், தச்சன் குளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களை தமது இடங்களை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

வவுனியா விமானத் தளத்தின் ஓடுபாதையை அடுத்துள்ள 450 ஏக்கர் காணி விமானத்தள விஸ்தரிப்புக்காக மூன்று கட்டங்களாக ஏற்கனவே 1975 ஆம், 86 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட பகுதியின் வட கிழக்குப் பகுதியில் உள்ள கோயில் புதுக்குளம், தச்சன்குளம் ஆகிய இடங்களை தற்போது மேலதிகமாக சுவீகரிக்கும் நோக்கில் அங்கு முட்கம்பி போடுவதற்கான கம்பங்களைப் படையினர் நாட்டியுள்ளனர்.

அத்துடன் அப்பகுதி வாழ் மக்களைத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறும் இராணுவம் கேட்டுள்ளது.

இராணுவத்தின் இந்த திடீர் அச்சுறுத்தலால் பீதியுற்ற மக்கள் வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர் என். எம். எஸ். சொர்ணபாலவிடம் முறையிட்டுள்ளனர்.

இராணுவத்தின் இந்த நடவடிக்கை வவுனியா யாழ். தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும்—

வவுனியா மாவட்டத்தில் இருந்து தமிழர்களை வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கையே அது என அவர்கள் பீதியடைந்துள்ளதாகவும் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (த-5)

### ஈராக் குண்டு நிபுணர் இலங்கையில்:

# அமெ. புலனாய்வு பிரிவினர் கொழும்புக்கு வருவர்

இலங்கை வந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஈராக் நாட்டைச் சேர்ந்த வெடிகுண்டு நிபுணர் ராம்ஸி அகமத் யூசுப் என்பவரைக் கண்டுபிடிக்க அமெரிக்காவின் புலனாய்வு (எப். பி. ஐ) அதிகாரிகள் கொழும்பு வரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரியில் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இந்த நபரை அமெரிக்க அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

இந்த நபர் இலங்கைக்கு சென்றிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கொழும்பு சி. ஐ. டி. அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சி. ஐ டியினர் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சி ஐ. டி. அத்தியட்சகர் ரத்னப்பிற்றிய தெரிவித்தார்.

சந்தேகநபர் கொழும்பு வந்துள்ளது பற்றி தங்களுக்குத் தகவல் ஏதும் தெரியாது என்று கொழும்பில் உள்ள ஈராக் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஓ-எ)

# வீரப்பன் விரைவில் கைது செய்யப்படுவார்

### மத்திய அமைச்சர் சொல்கிறார்

புதுடில்லி, ஜூலை 2

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் விரைவில் கைது செய்யப்படுவார்.

மத்திய உள்துறைப் பாதுகாப்பு அமைச்சர் ராஜேஷ் பைலட் முன்கண்டவாறு கூறினார்.

வீரப்பன் மறைந்து இருப்பதாகக் கூறப்படும் கர்நாடக எல்லையில் மலைச்சாரல் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை — வீரப்பனின் நெருங்கிய கூட்டாளி என்று கருதப்படும் சுபன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் என்ற நபர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அந்த நபர் மரணமானார் என்றும் கூறப்படுகிறது.

### ஆலயங்களில்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் ஆனிப் பூரணை உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறும். (க-87)

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் மடாலயத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு பௌர்ணமி பூசையும் தொடர்ந்து பெரிய புராண படனமும் நடைபெறும். (க-45)

o o o

வண்ணை, குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் திருவிளக்குப் பூசையின் பூர்த்திவிழா நாளை சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறும். (க-51)

o o o

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும். (க-30)

o o o

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறும். [க-11]

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவாலயத்தில் நடைபெற்றுவரும் மகோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவமும், நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். [ச]

# சமாதானக் கதவு திறந்தே உள்ளது

### பிரதமர் ரணில் கூறுகிறார்

தேர்தல் மூலம் வெற்றியோ தோல்வியோ ஏற்படுவதை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தால் சமாதானத்தின் கதவு புலிகளுக்காகத் திறந்தே உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடு செய்வோரின் கூட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் பேசிய போது—

இந்த வருட இறுதிக்குள் கிழக்கு மாகாணம் முழுவதும் அரசின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்றும்—

வடக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும்—

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதாகவும்— அவர் கூறினார். [உ-5,6]


உ

ஓம் விராட் விஸ்வப் ப்ரஹ்மணே நம:

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்:

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆடித் திங்கள் மூன்றாம் நாள் (03 - 07 - 1993) சனிக்கிழமை பகல் 10-30 முதல் 12 மணிவரை உள்ள சுபவேளையில்,

எமது திருநிறை மங்கள செல்வி

**க. ஜீவராணி**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழாவில் தங்கள் சுற்றஞ் சூழவருகை தந்து செல்விக்கு நல்லாசி வழங்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம் ★


தங்கள் நல்வரவை நாடும்:
செ. கந்தசாமியும் பாரியாரும்.

இல. 18, சபாபதி வீதி,
வண். கிழக்கு,
யாழ்ப்பாணம். (26309)


### கம்யூ. கட்சி 50 ஆண்டுநிறைவு

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி நாளை 3ஆம் திகதி அதன் ஐம்பதாண்டு நிறைவை பூர்த்தி செய்கிறது. (ஓ-எ)


## மிருதங்க அரங்கேற்றம்



செல்வன்

**காங்கேயன் ஆதவன்**

03 – 07 – 1993
சனிக்கிழமை மாலை 4-30 மணி

இளம் கலைஞர் மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன்
அவர்களின் மாணவன்

**செல்வன் காங்கேயன் ஆதவன்**

அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்:
திரு க. குணராசா அவர்கள்
பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி அவர்கள்
(தலைவர் நுண்கலைத்துறை,
யாழ் - பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. து. வைத்திலிங்கம் அவர்கள்
(மாவட்ட பிரதி ஆணையாளர்)

★ இசையரங்கு ★

சங்கீதபூஷணம் திரு. எஸ். பத்மலிங்கம் — பாட்டு
இசைஞானதிலகம்
திரு. ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
செல்வன் காங்கேயன் ஆதவன் — மிருதங்கம்
கலாவித்தகர் செல்வன் க. கண்ணதாசன் — கடம்
வித்துவான் திரு. எம். சண்முகலிங்கம் — தம்புரா

அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. இ. காங்கேயன்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.
திருமதி ச. காங்கேயன்,
யா/மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர்.

36/10, மணற்றறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (26313)



உ

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான ஆண்டு ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள் (04-07-1993) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணி முதல் முற்பகல் 11-35 மணி வரையுள்ள பூராட நட்சத்திரமும், பிரதமை திதியும் சித்த அமிர்த யோகமும் கூடிய கன்யா லக்கின
★ சுபமுகூர்த்தத்தில் ★

திரு. திருமதி பொன்னுத்துரை
அவர்களின்
திருநிறை செல்வன்
**சிறிநாதன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி நடராஜா
அவர்களின்
திருநிறை செல்வி
**பகீரதி**
அவர்களுக்கும்

Montreal, கனடாவில் உள்ள 3390 Laurier AVE இலுள்ள திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

★ மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம் ★

அன்று பிற்பகல் 4 மணியளவில், 18, கடுக்காயடி வீதி, நல்லூரில் உள்ள மணமகள் இல்லத்தில் தேநீர் விருந்து உபசாரம் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

திரு. திருமதி பொன்னுத்துரை
குடும்பத்தினர்.

திரு. திருமதி நடராஜா
குடும்பத்தினர்.

(26306)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

(02-07-1993

## அன்னையின் திருவருள் வேண்டுதும்

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

புராதன வரலாற்றுப் புகழ் மிக்க நயினை அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நிகழ்வது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி.

ஆலய விழாக்களில் உச்சஸ்தானம் வகிப்பது இரதோற்சவம். எந்தவோர் உயர்வு தாழ்வுமின்றி மக்கள் ஒன்று கூடி வடம் பிடித்துத் தேவியை வீதியுலா வரச் செய்வது, அவர்களின் அசைக்க முடியாத தெய்வபக்தி, தெய்வ நம்பிக்கை, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகிய உயர் பண்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

தீவக மக்கள், சிதறுற்று இடம்பெயர்ந்து, துன்ப வேதனைகளைத் தாங்கிக் கொண்டும் வாழ்வதை உலகறியும் இந்நிலையிலும் இவ்விழாக்களை எடுப்பது அற்புதம் எனலாம். மேலும் இவ்வூர் வாழ் சைவ இளைஞர்கள், அம்பாளை நம்பி ஊக்கமெடுத்து ஆற்றும் தொண்டுகளை மெச்சுகிறோம்.

ஒருமையுடனும், திரிகரண சுத்தியுடனும், தேவியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டால் நிச்சயம் எங்கள் துன்பங்கள் நீங்கும். அவள் எல்லாம் அறிபவள் நாம் வேண்டுவதற்குளது அவளின் திருவருள் ஒன்றே யாகும். எல்லாம் செவ்வனே நிறைவுற அம்பாளின் திருவருளை உளமார வேண்டி அன்பர்களை ஆசீர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

நல்லை ஆதீன முதல்வர்.

## கண்குளிரக் காணவேண்டும்

அம்பிகையின் அழகுக் கோலத்தை அலைகடல் ஓரத்திலே தரிசித்து நிறைவு பெறுவதற்கு அமைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில்தான் நயினையம் பதி. பக்தி மணக்கும் மண்டபங்களையும் சிற்பம் துலங்கும் திருப்பணிகளையும் உள்ளத்துணர்வை ஓங்க வைக்கும் திருவுருவங்களையும் அங்கு காணும்போது "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்ற எண்ணம் தோன்றாமல் இருக்க முடியாது

இத் திருத்தலத்தில் ஆனிப்பூரணையை பூர்த்தியாகக் கொண்ட தினங்கள் எழுச்சி மிக்கன. இலட்சோபலட்சம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் தெய்வீகக் காட்சி எங்கே? இன்று நாம் எங்கே?

நாகபூஷணித் தாயே! என்று அரற்றுகிறது நா. என்றாலும் உள்ளக்கோயிலில் அவளுக்கு விழா எடுத்து வழிபாடு செய்யும் பக்தர்களை யார்தான் தடுக்க முடியும்? எனவே நயினை வாழ் சைவ இளைஞர்களை மனமார வாழ்த்தி அம்பிகையின் திருவடிகளைக் கண்ணில் ஒற்றி ஆனந்தமடைவோமாக!

தங்கம்மா அப்பாக்குட்டி.

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பழை.

## அருட்பிரவாகம் பொலிவதாக

நயினை நாகபூஷணி அம்பாள் அடியார்கள் துயர் தீர்க்க இன்று தேரேறி பவனி வருகின்றாள்.

நாம் வாழும் இடங்களிலிருந்தே அவளை வழிபடும் பேறு எமக்குக் கிட்டியுள்ளது. அம்பிகைக்குரிய மஹோற்சவத்தின் உயர் நிலையைக் குறிக்கும் இரதோற்சவத்தில் அம்பிகை உலா வருகையில் அவளது திருவருள் எம் அனைவரினதும் இன்னல்களை நீக்கி இன்ப முன் இனிதே வாழத் துணை புரியும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

அந்நம்பிக்கையின் பயனாய் அம்பிகைக்கு நிகழும் இம்மஹோற்சவத்தின் பெறுபேறு எம் அனைவருக்கும் கிட்டுவதாகுக. இரதோற்சவத்தில் பவனி வரும் அம்பிகையின் அருட் பிரவாகம் எங்கும் பொலிவதாகுக!

ப. கோபாலகிருஷ்ணஐயர்

தலைவர், இந்து நாகரிகத்துறை

யாழ் பல்கலைக்கழகம்

## அன்னையின் அருள் பெறுவோம்

ஆன்மாக்களை லயப்படுத்துவதற்காக அகிலாண்ட கோடி பிரும்மாண்ட நாயகி அலைகடல் மத்தியிலே ஆட்சிபுரிந்து அனைத்து உயிர்களையும் ஈன்றெடுக்கின்ற அன்னையாகி விளங்குகின்ற நாகபூஷணி அம்பிகையினுடைய திருத்தேர் வலம்வருகின்ற காட்சியை மனக்கண் முன் நிறுத்தி இன்றைய தினத்தில் அந்த நாயகியின் பாதாரவிந்தங்களை தழுவி அன்னையின் அருளைப்பெறுவோமாக.

"தருமை" ஆகமப் பிரவீணா, ஆசீர்வாத சரபம்

சிவஸ்ரீ ஐ கைலை வாமதேவக்குருக்கள்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

தலைவர்,

இந்துமதக் குருமார் ஒன்றியம்

## எமது நன்றிகள்

எங்கள் குலதெய்வம நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலரை வெளியிடுவதற்கு எமக்கு மன நிறைவுடன் நிதியுதவி புரிந்த நயினைப் பெருமக்களுக்கும், வாழ்த்துரைகள், ஆக்கங்கள் வழங்கிச் சிறப்பித்த பெரியோர்களுக்கும் மற்றும் அச்சுப் பதிவு புளொக் தந்துதவிய விவேகானந்தா அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

— நயினை இளைஞர்கள்.

விளம்பர இலக்கம் (26298)

## அன்னை நாகம்மாள் திருவடிகள்

"நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே"

இறைவியினுடைய திருநாமங்கள் பற்பல. அவற்றின் பொருளை உணர்ந்து கூறுவதும், கூறி அர்ச்சனை செய்தலும் பக்தர்களுடைய இன்பத்தை மிகுதியாக்கும். இத்தகைய நாமங்களால் புகழ் பெற்ற எம் பெருமாட்டியின் திருவடிகளே சரணம் என்றிருந்தால், நமக்கு எல்லா வகையான துன்பங்களும் அச்சங்களும் போகும் அதுவே எம்மைப் பாதுகாக்கும் அரணாகவும் அமையும் என்று பாடிப் பரவசமடைகிறார் அபிராமிப்பட்டர்.

அபிராமிப் பட்டருடைய இந்தப் பாடலிலே நாக பாம்புகளை மாலையாக அணிந்த அம்பிகையின் அம்சத்தைக் குறிப்பிடுவதைக் காணலாம். "சாதி நச்சுவாய் அகிமாலினி" என்னும் தொடர் இதனைச் சுட்டுகின்றது நஞ்சு பொருந்திய வாயையுடைய பாம்பு மாலையை ஆபரணமாக அணிந்தவள் என்பது இதன் பொருள். அடுத்து 'வராகி' என்று வருவது பூமாதேவியைக் குறிக்கிறது. இந்தப் பூமியை ஆதிசேடன் தாங்கி நிற்பதான செய்தியும் உண்டு. எனவே பராசக்திக்குப் பாம்பு மாலை பொருத்தமுடையதே. சிவபெருமான் பாம்புகளை மாலையாக அணிந்தது போல பராசக்தியும் பாம்புகளை மாலையாக அணிந்திருப்பதில் வியப்பே இல்லை. "சோதி படல சூடி காகோடி பணிமதாணி மார்பாளே" என்று ஒட்டக்கூத்தரும், "நாகபூஷணத்தி அண்டம் உண்ட நாரணி" என்று அருணகிரியாரும் பாடியுள்ளனர். இவையனைத்தும் நாகம் சூடிய நாயகியை நம் முன் நிறுத்துகின்றன.


இப்படியான ஓர் வழிபாட்டு அமைப்பு நாகர் என்ற இனத்தவர்களிடையே தொன்று தொட்டு விளங்கி வந்திருப்பது வரலாற்று உண்மையாகும். இந்த நாகர்கள் ஆதித் திராவிட இனத்தவரென்றும் இவர்களே இலங்கையின் வடபகுதியில் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்தனர் என்றும் அறிகின்றோம். இந்தத் தமிழ் நாகர் அமைத்த முதன்மையான வழிபாட்டிடமே நயினாதீவு நாகம்மாள் கோயிலாகும்.

நயினை நாகம்மாள் ஆலய மூலஸ்தானத்தில் ஐந்து தலை நாகபாம்பின் கல்லாலான வடிவமும் அதன் முன்னால் உருவமற்ற கல்லாலான ஓர் அமைப்பும் உண்டு. கோயில் விக்கிரகங்க... சிறப்பைப் பற்றி ஸ்ரீ செ... கண்ணு ஸ்தபதியார் கூ... தாவது;

"மூலஸ்தான விக்கி... தின் அமைப்பைப் பார்த்... அது ஆயிரம் வருடத்தி... முந்தியதாகப் புலப்படுகி...

'நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே'

— அபிராமி அந்தாதி.





## சக்தியே போற்றி போற்...

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மனமாய இருள்போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வி...
மாற்றிமன வீறுதருவாய்
பொங்குதிரை ஆழிபோல் என்னுளம் பூரிக்கப்
பொதுவேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போர்த்துசாந்தம் அளிப்பாய்
செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்யஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருள்வாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக்காத்து அருள்அன்னையே
சாதாசிவ மனோன்மணி சிதாகாச ஒப்சுத்த
சக்தியே போற்றி போற்றி!

— கவியோகி சுத்தானந்த பாரதிய...

* * * * *

## நயினையம்பதி நாரணி பூரணியே

வேதச் சிலம்பு கலீர்கலீர் என்று
விளம்பு மிசையெழுப்ப
வித்தக ஞானியர் உள்ள மெனுங்குகை
மேவி நடம்புரிவாள்
நாதனை ஆட்டி நலம்பெறு பேரெழில்
நண்ணு மிளங்குமரி
நாக மணிந்த பரைநயி னைப்பதி
நாரணி பூரணியே!

கலைமகள் ஆசிரியர் - கி.வா. ஜெகந்நாதன்

## பண்ணொன்ற இசை பாடும் நயி...

ஓம் ஓமென ஒலித்து அன்னையின் பாதக் கமலங்களை முத்தமிடும் அலைகடல் வலம்வரும் அழகிய தீவு நயினாதீவு.

அன்னையின் அருளை அள்ளிப்பருகும் அவ்வூர்வாசிகளுள் பண்ணொன்ற இசைபாடும் பாவலர் பலர் அன்றும் இருந்திருக்கின்றார்கள், இன்றும் இருக்கிறார்கள்.

நயினைமான்மியம், நிரோட்ட யமக அந்தாதி ஆகிய சிறந்த நூல் காணப் பாடியுதவிய நயினை வரகவி க. நாகமணி புலவர்கள். இப்புலவர்கள் வரிசையில் முதலிடம் வகிக்கும் சிறப்பு வாய்ந்தவராவார். இவ்விரு நூல்களிலும் பல நூறு பாடல்கள் உள்ளன இச்சிறு கட்டுரையிலே அவை பற்றி விவரிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கப் போதுமல்லவா? நந்தாப் புகழ் சேர் நயினைத் தலச் சிறப்பைக் கூறும் நயினை மான்மியத்திலிருந்து ஒருபாடல்:

"பவக்கடற் கிடைவீழ்த் தலமரு வோரைப்
பாதுகாத் திடப்ப...
...பர்கிளப் கொடிதன்
றிருப்பதத் துணைமல ரேஎவே

யுவப்புறத் தனனச்சூ ழாழி மேனாவா
யொழிதர மறலிதோ யுற்றுத்
தவிப்பவ ரயர்கைக் குருபுணை மானத்
தங்குமந் நயினையாந் தவமே."

இவருக்குப்பின் நயினை முத்துச்சாமியார் அவர்... குறிப்பிடலாம். இவர் முற்றுந்துறந்த தவசீலர். இவரத... யார்கள் இன்னும் பலர் யாழ்ப்பாணத்திலுள்ளனர். அம்பாள் மீதும் அருட்பாடல்கள் பல பாடியுள்ளார் ... கப் பெருமான் மீது இவர் பாடிய ஒருபாடல் வரும...

வேக மாநெறி சேரும் வினைகளும்
தாக போகம் விடாத தளர்ச்சியும்
சோக வாரியி னால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

அமரராகிவிட்ட நயினாதீவு க. இராமச்ச... அவர்கள் ஒரு சிறந்த இல்லறஞானி. அன்னை ஸ்ரீ... பூஷணியின் மேல் அளவு கடந்த பக்தியுள்ளவர். அவர் ... பாளை நோக்கி என்ன வேண்டுகிறார் பார்ப்போம்

எனக்கென்றோர் தனிவரம்யான் கேட்க வில்லை
என்னினத்தார் வாழ்வொன்றே கருத வில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாள் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

...7–1993)

## ...டிகள் சரணம்

...பும் உண்டு. இக் ... விக்கிரகங்களின் ...பற்றி ஸ்ரீ செல்லக் ...தபதியார் கூறிய

...தான விக்கிரகத் ...ப்பைப் பார்த்தால் ...ம் வருடத்திற்கு ...ப் புலப்படுகிறது.

ஆனால் நாகப் பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம். மூலஸ்தான விக்கிரகத்துக்குப் பின்னால் உள்ள நாகபடம், பார்க்கப் பயங்கரமாக இருக்கிறது. சீறுவது போல இருக்கிறது.''

இதன்படி பார்த்தால் ஆலயத்தின் தொன்மை வெளிப்படும்.

நயினாதீவைப் பொறுத்த வரையில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களோடும் தொடர்புடையதாக இருந்திருக்கிறது.

யாகும். நயினாதீவு பற்றிய இலக்கியப் பின்னணியை விவரிப்பின் இக்கட்டுரை விரியும் எனக் கருதி அவற்றை இங்கு கூறாது விடுகிறேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்புற அமைந்த இந்தத் திருத்தலம் கீர்த்தி இலங்கையில் வேறெந்தத் தலத்திற்குமில்லாத சிறப்பு வாய்ந்ததாகும். இன்றுள்ள சூழ்நிலையில் இருட்டறை மூலையில் இருப்பது போல இருக்கும்

''நாகம்மாள் ஆச்சியையும்; ஆழ்கடல் மத்தியில் அலைகள் தாலாட்ட, தென்றற் காற்றும், தீந்தமிழ்ப் பாசுரங்களும், வேப்பமர நிழலும், அமுதசுரபி அன்ன

...நினைப்பதுன்னை ...தாமறையின் ...ய யிமயத் ...ானந்தமே'
...மி அந்தாதி.

— நாக. சண்முகநாதபிள்ளை —



காலத்திற்குக் காலம் நடந்த மதமாற்றங்கள், அந்நிய ஆதிக்க வெறியாட்டங்கள் கடலால் சூழப்பெற்றிருக்கும் நயினாதீவையும் விட்டு வைக்கவில்லை

இந்த அந்நிய ஆதிக்க அழிப்புகளின் மத்தியிலும் இன்றும் அன்னை புன்னைய பொலிவுடன் பூசிக்கப் பெறுகிறாள் என்றால் இத்தீவிலுள்ளோர் சைவத்தை விட்டுப் புறசமயத்தைத் தழுவாமையும். தீவிற்கு வெளியே உள்ள சைவமக்களின் அதியந்த அம்பாள் பக்தியுமே

தானமும் சேர்ந்து அலங்கரிக்கும் ஆலயச் சூழலை, நினைந்து நினைந்து நெக்குருகுவோர் பலர். 'பாம்பைக் கண்டால் நாகம்மாள், பாலரை வேண்டில் நாகம்மாள்; தீங்கு வந்தால் நாகம்மாள்; தீரா நோய்க்கு நாகம்மாள்; ஓங்கும் பசியில் நாகம்மாள் ஒவ்வொருவர் வாயிலும் நாகம்மாள்''— இந்த ஏக்கம் போக்க அன்னையின் திருமுன் விரைந்து செல்ல; வெவ்வினைகள் வேரற, அன்னையை வேண்டுவோமாகுக. ★

## நாகம் பூச்சூடும் நாகேஸ்வரி

நாகேஸ்வரி வழிபாடு மிகவும் புராதனமானது. தொன்மைக் காலத்தில் தோன்றிய இவ்வழிபாட்டு நெறியின் பழமையினை ஈழத்தின் வடபால அமைந்து விளங்கும் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

''நாகபூஷணி'' என்றால் நாகத்தை அணிந்தவள் என்பது பொருளாகும். ஆனால் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மூலமூர்த்தி 'தானே எழுந்த அத்தத்துவ நாயகி' என்ற திருமூலரின் வாக்கிற்கு ஏற்ப சுயம்பு வடிவமான ஐந்துதலை நாகத் திருவுருவமாக 'நாகேஸ்வரி' எனக் கூறத்தக்க வகையில் விளங்குகின்றாள்.

அதன் முன்பாக அதன் அடியிலுள்ள அழகிய பீடமொன்றில் லிங்க வடிவில் ஓர் அன்னையின் அருவுருவம் காணப்படுகின்றது. இதனை ''சக்தி லிங்கம்'' என்று கூறமுடியும். காஞ்சியில் காமகோடிபீடம் அமைந்து விளங்கும் ஆதிபீட பரமேஸ்வரி ஆலயத்திலும்

தனிச் சிறப்புடைய சக்திலிங்கம் ஒன்று காணப்படுவது இங்கு குறிப்பிடற்பாலதாகும்.

நாகேஸ்வரியாக- சக்திலிங்கமாக விளங்கிய இத்திருவுருவங்களுக்கு பிற்காலத்தில் நாகவடிவில் அமைந்த பொன், வெள்ளி என்பவற்றாலான அங்கிகளை சாத்தி வழிபட்டபோது நாகேஸ்வரி நாகபூஷணி என்ற நாமத்தால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பாம்பை பெண் தெய்வமாக வழிபடுவதும், நாக பாம்பு அணிந்திருந்த பெண் திருவுருவங்களை வழிபடுவ

எம். வேதநாதன், எம். ஏ

தும் புராதன காலத்தில் கிறீந்தீவில் வாழ்ந்த மக்கள் மத்தியில் நிலவியதாகத் தெரிகின்றது. இப்புராதன வழிபாட்டு மரபின் வரலாற்றுக் கருவூலமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

நயினை நாகேஸ்வரியை நாகம் பூச்சூடி வழிபட்டதாக கர்ணபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. இத் தெய்வீக வரலாற்றைச் சித்திரிக்கும் சிற்பங்கள் இவ்வாலயக் கோபுரத்திலும், அம்பாளின் தேரிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாகம் பூச்சூடும் தேவிபாகவத-பெரியபுராண சமய பண்பாட்டு மரபினை எடுத்துக் காட்டும் ஈழத்தின் ஈடு இணையற்ற சக்தியாலயமாக, புவனேஸ்வரிபீடமாக நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

சிலந்தி வழிபட்ட திருவானைக்காவிலுள்ள இறைவரை யானை ஒன்று அனுதினமும் துதிக்கையால் திருமஞ்சனமாட்டி பூச்சூடி வழிபட்டமை போன்று நாகம் பூச்சூடி வழிபட்ட நாக பூஜிதையாக - அபிராமி அந்தாதி கூறும் ''அகிமாலினியாக''- அதிசயமான வடிவுடையவளாக ஈழத்தில் நயினை நாகபூஷணித் தாயே விளங்குகின்றாள். ★

## ...போற்றி!

...காலைபோல் ...
...னது சோர்வினை
...
...றுளம் பூரிக்கப் ...
...டு நிலவெனப்
...து சித்தமிசை
...யோகமும் ...ருள்வாய் ...புவனந் ...னயே ...ச ஓச்சுத்த ...!
...னந்த பாரதியார்.

★ ★

## ...பூரணியே!

...று
...னுங்குசை
...பேரெழில்
...தி
...ஜெகந்நாதன்.



## உயிர்ப்பாற்றலுள்ள அம்பிகை

நயினை நாகபூஷணி அம்பாள் என்றும் உயிர்ப்பாற்றலுள்ள ஆதிபராசக்தியாவாள் சைவசித்தாந்த தத்துவத்தினடிப்படையில், 'சிவனுக்குச் சிவை' என்ற கருத்தையும் சிவைக்குச் சிவன்' என்ற கருத்தையும் துணிந்து நோக்குவோர்க்குப் பின்னதாகிய 'சிவைக்குச் சிவன்' என்ற மாபெரும் உயிர்ப்பாற்றலுள்ள தத்துவமே பேலோங்கி நிற்பதை நயினையிலே ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் எழிலான ஆலயத்திலே காண்கின்றோம்.

அறிவால் அளக்க முடியாத உணர்வாழம் கொண்ட தனிப்பெருந் தத்துவம் நயினை நாகேஸ்வரி. பெண்மை நலனுக்கெல்லாம் பெருந்திருவாய் விளங்குகின்றாள் நயினையுறையும் நாயகி. தற்சாத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வில்லாத தன்

மையும் நயினையில் கவனிக்கத்தக்கது. உலகின் பல பாகங்களிலேயும் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களது வாழ் முதலகிய பொருளாக இலங்குகின்றாள் நயினை நாக பூஷணி.

முட்டிமோதி, நுரைசீறி மேலெழுந்து விழுந்து வரும் சமுத்திரத்தையே தன்னடியிற் சரணடைய வைக்கும் ஆற்றலும், மரஞ்செடிகொடிகளெல்லாவற்றையும் ஆட்டியசைத்து, புயலென ஓசையுடன் வீசும் காற்றையும்

கொள்ளாக் காட்சியாகவும் கருத்துக்கு மாட்சியாகவும் அமையும்.

சக்தி பீடங்களுள்ளே ஸ்ரீ புவனேஸ்வரி பீடமென்று சிறப்புப் பெறுவதுடன் அறுபத்து நால்வர் சிலைகளையும் பாம்பு சுற்றியகல் கருடன் கல் என்னும் வரலாற்றுத் தடயங்களையும், கல்வெட்டினையும் அழகிய சித்திரத் தேரையும் கொண்டு விளங்கும் நயினை நாகேஸ்வரியின் ''சர்ப்பு'' மெய்புளகாங்கிதமடையச் செய்வது. உண்மை

— கனகசபாபதி - நாகேஸ்வரன் எம். ஏ. —

'சாந்த சொரூபி' யாக நின்று அடக்கும் திருவருட் பொலிவும் கொண்டவள் நயினை ஸ்ரீ நாகபூஷணி. ''வாயு பட்சணி'' நாகம் பக்கத்திலே சாந்தமாக எழுந்தருளியிருக்க அம்பாள் உலகை இரட்சிப்பதற்காகப் பவனி வரும் 'தவை' (தாய்மை) கண்

யில் 'பாம்பாகவே' அம்பாள் காட்சி கொடுத்தாள் என்ற வரலாறு இன்றும் உண்மை. தம்மை நினைந்து வழிபடும் அடியார்களுக்குப் பாம்பாக வந்து தனது அசிகளை வழங்கிச் செல்லும் 'இறை பண்பு' நயினை நாகேஸ்வரிக்கு உண்டு. ★

## நயினைப் புலவர்கள்

...னாவா ...வத் ...மானத் ...மே.''

...ாமியார் அவர்களைக் ...வசிலர். இவரது அடி...திலுள்ளனர். இவர் ...ாடியுள்ளார் விநாய...ருபாடல் வருமாறு:-
...ம்
...ம்
...ம்
...ற்றுவாம்.
...க. இராமச்சந்திரன் ...அன்னை ஸ்ரீ நாக...ிவவர். அவர் அம் ...பார்ப்போம் ...கேட்க வில்லை ...கருத வில்லை

உனக்கெல்லா வுயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லைச்
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே.

திருமஞ்சத்தில் எழுந்தருளி வந்து அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்யும்படி நயினைக்கவிஞர் நாக. சண்முகநாத

நயினை வித்துவான் க. கா. சுந்தரம்

பிள்ளையவர்கள் அம்பாளை நினைந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டுகிறார்.

திடங்கொண்ட கல்நெஞ்ச முருகி யன்பர்
திக்கெல்லாந் திருக்கோலக் காட்சி காண
இடங்கொண்டு இரவெல்லாம் விழித்துக் கண்கள்
இமையாமல் இன்னருளை வேண்ட அன்பு
வடங்கொண்டு நிரைதிரையாய்ப் பற்றி உந்தன்
வரங்கொண்டு போவதற்காய் வந்தாய் தாயே!

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கள் குலதெய்வம்

அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினை நாகபூஷணி அம்மனின் வருடாந்த உற்சவம் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. வற்றாக் கருணை பொழியும் அம்மனின் அருளாட்சி வெள்ளத்துள் ஊறித் திளைத்து வாழும் அடியார்கள் பலர்

இவ்விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பில்லாமல் வாடுகின்றார்கள். நீலக்கடல் வந்து நித்தமும் அம்பிகையின் கால் கழுவும் கோலம் காணாது எமது கண்கள் கடலாகின்றன. எழில்மிகு காட்சியுடன் அருளாட்சி செய்துகொண்டு அம்பாள் வீற்றிருக்கும் தேர் வடத்தில் கைபிடித்து ஊரதிர ஆர்ப்பரித்து எங்கள் துயர் கூறி இளைப்பாறும் நாளை ஆவலுடன் தேடிநிற்கின்றோம். அம்பிகை அடியார்களுக்கு வேண்டுவதை வேண்டியவாறு கொடுத்

தருளும் மாட்சியுறு காட்சி எல்லாம் எம்மனதில் நிறைகின்றது.

''அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்'' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அம்பாளை நாடிவந்து தாம் வேண்டிய வரங்களைப் பெற்று உய்தி அடைந்த அடியார்கள் ஏராளம்.

நாகபூஷணியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் உலகளாவிய உறவுகளோடு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கலாசார பண்பாட்டுச் சூழல்

எனினும் புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, அராலி முதலிய இடங்களிலுள்ள சைவ மக்களும் நயினை நாகபூஷணியையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடும் பண்புண்டு.

இறையனுபவத்தைச் சொல்லாலும், பொருளாலும், அறிவாலும் அளக்க முடியாது எங்கள் குலதெய்வத்தின திருவருட் பொலிவை அவளது கருணையை அனுபவத்தால் மட்டுமே அறிய

- க கதிரவேலுப்பிள்ளை -

களில் வாழ்ந்தபோதும் அம்பிகையின் அடிமறவாத அடியவர்களாகவே வாழ்கின்றனர். ''எண்ணிய எண்ணியாங்கு எய்துவிக்கும் எங்கள் குலதெய்வம்'' என்று நாகபூஷணியை நயினை மக்கள் கொண்டாடுவது வழக்கம்.

முடியும் என்பதை அம்பிகையின் கடைக்கண் பார்வையால் அருள்பெற்றவர்களே அறிவர். திருவிழாக்கால அன்னையின் அருட்பொலிவு தரணியில் சாந்தியைத் தருவதாகுக! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வெள்ளளப் பேட்டுக்குஞ்சு, பிறவுண் சேவல் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகா பதி', மானிப்பாய். (26308)

## நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணி அம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5327)

## தேவை

ஆயிரம் வாதநாராயணி அல்லது முட்கிளுவை கதியால்கள் உடன் தேவை. தொடர்பு: சீ. இராமச்சந்திரன், வில்லூன்றிப்பிள்ளையார் கோவில், யாழ்ப்பாணம். (6301)

கமிஷன் அடிப்படையில் சோடா சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் உடன் தேவை. நேரில் வரவும்: 172, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாடு அச்சகத்திற்கு முன்பாக) (26304)

## மணமகள் தேவை

இந்து மதம், சுத்த சைவ போசனமும், பொருளாதாரமும், பல தொழிற்பயிற்சிகள் பெற்று, பெரிய தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்பவருக்கு; ஓர் ஆசிரியர் 29 வயதுக்குட்பட்ட மருமகளைத்தேடுகின்றார் தொழில் புரியும் பெண்ணானால் சீதனம் பெரும் பிரச்சினையாகாது இல. 15, மே/பா உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5979)

## இலவச திருமண சேவை

33 வயது, திருவாதிரை, 12இல் செவ்வாயும், சூரியனும் உடையவர் சுவிஸில் இருந்து வீசாவுடன் யாழ் வரவுள்ளார். தகுந்த மணமகள் தேவை. பெண்ணை அழைத்துச் செல்லலாம். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ்: நாச்சிமார் கோவிலடி. (26314)

# அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 2

டென்சில் கொபேகடுவ உட்பட பத்துப்படை அதிகாரிகளை பலிவாங்கிய அராலி நிலக்கண்ணிவெடித்தாக்குதல் பற்றிய கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்க நேற்று முன்தினம் சமர்ப்பித்தார்

இந்த அறிக்கையை அமர்வுகால அறிக்கையாக வெளியிடுவது என்று அமைச்சரவை தீர்மானித்தது (த-எ)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தாபகர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-00மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும் மருதனார்மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகவும் வைபவத்தில் கலந்து கொள்வர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொன். நாகரத்தினம் தாபகர் உரை நிகழ்த்துவார்

(இ-152-89)


# நவகைடன்ஸ்

அருச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 94, 95**

விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம்: 03-07-1993

காலை 10-00 மணி

**O/L வார இறுதி வகுப்பு**

தமிழீழ க. பொ. த, பரீட்சைக்கான மீட்டலும் வினா-விடையும்

ஆரம்பம்: 03-07-1993

காலை 8-00 மணி

ஆண்டு 9, 10 வகுப்புக்களும் நடைபெறும்.

**O/L Day Class (பகல் நேரம்)**

புதிய பிரிவு

ஆரம்பம்: 03-07-1993

காலை 8-00 மணி

(5339)


# மூன்றாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 22 — 05 — 1962

மறைவு: 07 — 07 — 1990

## இராஜா ஸ்ரீபிரபாகரன்

திதி: 02—07—1993

அன்புச் செல்வமே! கண்ணீரில் மூன்றாண்டு கழிந்தது
உமது பிரிவால் துயருறும் எம் உள்ளங்கள்
உமது ஆத்ம சாந்திக்கு இறைவனைப்-
பிரார்த்திக்கின்றன.

என்றும் உமது நினைவோடு;
மனைவி, தாய், உறவினர்கள்.

64/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (26292)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 06 — 10 — 1921

விண்ணில்: 07 — 07 — 1990

அமரர்

## பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதிஐயர்

(தும்பளை - பருத்தித்துறை)

திதி: 02 — 07 — 1993

ஆண்டு மூன்றானதோ அந்தோ நீர் எமைப் பிரிந்து
ஈண்டு நாமும்மையே நித்தமும் நினைக்கின்றோம்
மீண்டு மும்முகத்தை நாம் மேதினியிற் காண்பதெப்போ
மாண்டு நீர் போனதேன்? மறப்போமோ
நின் மதிமுகத்தை!

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (26310)

# பண்ணொன்ற இசை....

(4 ஆம், 5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடங்கொன்ற உத்தமியே நாகம்மாளே
வீதியுலா மஞ்சத்தில் வாரீரம்மா!

அம்பாளிடம் வரம் பெற்றுச் செல்ல வந்து குவிந்து கண்விழித்திருக்கும் மெய்யடியார்களுக்கு அவள் வரந்தர மறுப்பாளோ? புத்திர பாக்கியங் கேட்டு விரதமிருந்தார்க்குப் புத்திரப் பேறு நல்கிப் புகழ்பெற்றவள் பராசக்தி.

அம்பாளின் அடியவன் காமாட்சி சுந்தரம் என்பவர் தனது நோய்த் துன்பத்தை நீக்கிச் சாந்தியளிக்குமாறு அம்பாளைப் பிரார்த்தித்து ''ஸ்ரீநாகபூஷணி அந்தாதி'' என்ற நூலைப் பாடி நோய்த்துன்பந்தணியப் பெற்றார்.

அடியேனை யுன்ற னருட்கட வாழ்த்தி யலறவிட்டுப்
படிமே லருந்தமிழ் பாடென வென்னைப் பணித்தவம்மே!
நெடிதான தேர்மணிக் கிண்கிணி நாதமும் நீள்விடங் கொள்
அடியாரின் ஆர்ப்பும்என் அத்தியத் திற்செவி யார்த்தருளே!

திருத்தேர் பவனிவரும் போது தேரில் பொருந்திய மணிகளின் கணீர் கணீர் என்ற நாத ஒலியும் அடியார்கள் அப்போது, அம்பாளுக்கு அரோகரா, அரோகரா என்று கடலொலிபோ லெழுப்புகின்ற அருளொலியும் என்மனதிற்கு இன்பந்தரவல்லன. அம்பாளை பக்திபெருகச் சிந்திக்கச் செய்வன. அதனால் அந்திய காலத்தில் அதை என் காதுகளில் ஒலிக்கச் செய்தாயே! என்று ஆவலோடு கேட்கிறார்.

இப்புலவர் வரிசையில் திருவாளர்கள் வை. விசுவலிங்கம் அமரர் ஆ. இராமுப்பிள்ளை, சி. பரராசசிங்கம், நா. கந்தசாமி, சி. குமாரசாமி, ப. கு. சரவணபவன் வே. செல்வநாயகம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். நயினை மண்ணிற் பிறந்தவர்களுக்கு இசை, ஒரு பிறவிக்கொடை எனலாம். சாதாரணமாக எல்லோரும் பண்ணோடு பாடவல்லவர்களே. இது அம்பாளின் அருட்கொடையாகும். ★


# நவகைடன்ஸ்

அருச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

**A/L 94 & 95**

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீகாந்தன் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| தமிழ் | — திரு. கணேஷ் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — திரு. சிவமகாலிங்கம் |
| அரசியல் | — திரு. கேதீஸ்வரன் |

ஆரம்பம்: 03 - 07 - 1993

1-30 மணி

குறிப்பு: 94 A/L ஆரம்பத்திலிருந்து அலகு ரீதியாக மீட்டலும்-வினாவிடையும்

(சி-5341)


# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



படைப்பு: 16 — 12 — 1966

அழிப்பு: 28 — 06 — 1988

## செல்வன் சிவபாதசுந்தரம் கலாதீபன்

திதி: 02 — 07 — 1993

மண்ணில் மறைந்ததெம் மணிவிளக்கு!
விண்ணில் சேர்ந்ததெம் ஒளிவிளக்கு!
அகத்தில் அணைந்ததெம் அன்புத் தீபம்!
அணையாதது என்றும் எம் பாசத்தீபம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, அத்தான், அக்கா,
அண்ணன்மார், அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்,

''கலாதீபம்'',
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (5980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## ஆண்டிகள் கட்டும் மடம்!

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றை வகுப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஏனைய எதிரணிக் கட்சிகளும் விலகிக் கொள்ளப்போவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தெரிவுக் குழுவில் ஆளுங் கட்சியினரே பெரும் எண்ணிக்கையில் அங்கம் வகிக்கிறார்கள். நாங்கள் சுதந்திரமாகச் செயலாற்ற முடியாது.—

தீர்வுக்கான ஆலோசனை எதனையும் ஆளுங்கட்சி முன் வைக்கவில்லை. ஆகையால் தெரிவுக்குழுவின் நோக்கம் நிறைவேறும் சாத்தியமே இல்லை—

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்கா தெரிவுக்குழுவில் இருந்து விலகுவதற்குக் காரணம் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவுக்குழுவில் இருந்து விலகுவதற்குக் கண்டு பிடித்திருக்கும் காரணங்களை, தமிழ் மக்கள் எப்போதோ அறிந்து கொண்டார்கள். குறிப்பாக தீர்வுக்கான ஆலோசனை ஒன்றை அரசு முன்வைக்காது பின்னடிப்பதால் தெரிவுக்குழு ஓர் ஏமாற்று வேலை என்பதும்' காலம் வாங்கும் கருவி என்பதும் கடந்த இரண்டு வருடங்களில் இப் பத்தியில் பல தடவைகள் தமிழ் மக்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

தெரிவுக்குழுவில் சிங்கள எம். பிக்களே அதிக எண்ணிக்கையில் இருப்பதால் அது உண்மையிலேயே ஒரு சிங்களக் குழு என்பதும் தமிழர்கள் எடுத்துக் காட்டிய ஒன்றாகும். தமிழர் தரப்பினரின் கருத்துக்கள் அங்கு பொருட்படுத்தப் படவில்லை. அமைச்சர் தொண்டமானின் ஓரளவு நியாயமான யோசனையை ஓரத்தில் போட்டபோதே தெரிவுக்குழு எத்தகையது என்பது தமிழ் மக்களுக்குத் தெளிவாக விளங்கியது!

அது தீர்வைக் கண்டு பிடிக்கும் என்று நம்புவது மண் குதிரையில் ஆற்றைக் கடக்க நினைப்பது போலாகும் என்பதனையும் தமிழர்கள் உணர்ந்திருந்தார்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது ஆலோசனையை முன் வைத்திருந்தால், அரசு ஓர் ஆலோசனையை முன் வைப்பதற்கு, அது தூண்டுதலாக இருந்திருக்கும் என்பதையும் தமிழ் மக்கள் எடுத்துச் சொல்லாமல் இல்லை.

மொத்தத்தில், தெரிவுக்குழுவுக்கு ஆண்டிகள் கூடி மடம் கட்டிய நிலையே ஏற்படும் என்று தமிழர்கள் ஆரம்பத்திலேயே எதிர்பார்த்தனர்! இரண்டு வருடங்களின் பின்னர் அது நிதர்சனமாகி உள்ளது.

எனவே அரசாங்கத்துக்கு ஒரு புத்திமதி. தெரிவுக்குழு தானாகக் கலைவதற்கு முன்னர் உத்தியோகபூர்வமாக அதனைக் கலைத்து விடுவதே உகந்தது! இனப் பிரச்சினைக்கான ஓர் திட்டத்தை மனதிலிருத்தி உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்.

கைதிகள் விடுதலையுடன் உருவான சாதகமான சந்தர்ப்பத்தைக் கைவிட்டுத் தவறிழைத்ததை நிவிர்த்தி செய்யும் வகையில், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தையை, காலந் தாழ்த்தாது தொடங்க வேண்டும். இராணுவத்துக்குக் கொடுத்த ஆணைக்கு (Mandate) பயந்து அதனைப் பிற்போட்டால் இனப்பிரச்சினை சுமுகமாக தீர்வதாக கனவுகூட காண இயலாது போய்விடும்! யதார்த்தம் புரியவில்லையெனில் விபரீதத்தை விட விளைவு வேறென்ன?

## பாடசாலைகளில் விளையாட்டு நிகழ்வுகள் இன்று

யாழ் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1-45 மணிக்கு அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும். முன்னாள் பிரதி அதிபர் திரு. அ. கருணாகரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி கமலாம்பிகை கருணாகரன் பரிசில்களை வழங்குவார்.

o o o

பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி தே சுந்தரலிங்கம் வழங்குவார்.

o o o

சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

மருதனார் மடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. சிவகுமாரன் பிரதம விருந்தினராகவும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. சத்தியா சிறப்பு விருந்தினராவும் கலந்து கொள்வார்கள். (க-89)

o o o

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பருத்தித்துறை வசந்தன் (மில்லர்) மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இவ் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பீடத் தலைவர் பேராசிரியர் வி. ஆறுமுகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வெற்றி வீரர்களுக்கான பரிசில்களை திருமதி வி. ஆறுமுகம் வழங்கிக் கௌரவிப்பார். (க-118)

o o o

சந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை சனசமூக நிலைய கண்ணன் சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (க-152)

o o o

நவாலி றோ. க. த. க. பாடசாலை இல்லங்களுக்கு இடையிலான மெய்வலலுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சென்; பீற்றர்ஸ் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும். (இ-51)

யாழ் புனித அடைக்கல மரியான் விளையாட்டுக்கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியான் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு.

★ குருநகர் தொடர்மாடி அணி எதிர் விக்னேஸ்வரா அணி

★ யங் ஹென்றியன் அணி எதிர் சென் நிக்கிலஸ் அணி

o o o

நவாலி சென் பீற்றர்ஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணி முதல் சென் பீற்றர்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

o o o

சங்கானை ஜீபிற்றர் விளையாட்டுக்கழகம் டாக்டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்துள்ள கரப்பந்தாட்டப் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் சங்கானை ஜீபிற்றர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு.—

★ 2 30 மணி மாதகல் பற்றிமா மேரிஸ் "ஏ" அணி எதிர் தொண்டமானாறு கலைவாணி "பி" அணி

★ 4.00 மணி - வாளையம் மாள் வி. க. ஒரேஞ் அணி எதிர் கலைமதி வி. க "ஏ" அணி

உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன. பங்குபற்றும் கழக அணி வருமாறு-

★ 3. 30 மணி- திருமலை நட்சத்திரங்கள் அணி எதிர் சுன்னாகம் ஜொலிவோஸ் அணி

★ 4 30 மணி - ஊரெழு றோயல் 'ஏ" அணி எதிர் உரும்பராய் ஒலிகா அணி.

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்ட சாரணியர் வழிகாட்டுநர் பயிற்சிப் பாசறை இன்று முதல் திங்கள் முற்பகல் வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்பாசறையில் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி ஜி அருட்பிரகாசம், யாழ். மாவட்ட சாரணியச் செயலாளர் நாயகம் செல்வி சித்திரா அருள்நந்தி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(இ)

## அமெரிக்கா மீது கண்டனம்

அமெரிக்கா ஈராக் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 6 எதிர்க்கட்சிகளும் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த எதிர்க்கட்சிகள் நேற்று விடுத்த அறிக்கையில் "அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அரங்கில் உள்ள கேடிக்குச் சமமானவர்" என்று குற்றஞ்சாட்டி உள்ளனர்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹரோல்ஹேரத்தும் பில்கிளின்ரன் மீது கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டதுக்கு அவர் இலங்கை அரசின் கவலையைத் தெரிவித்துள்ளார். (இ-6)

யாழ் மாவட்ட கிராமிய

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெற விருந்த — வலைப்பந்து மத்தியஸ்தர்களுக்கான— கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும். (உ)

★ ★ ★

உடுவில், ஜூலை 2

மருதனார் மடம் கோட்டத்தைச் சேர்ந்த இசையாசிரியர்களுக்கு நாளை, சனிக்கிழமை நடைபெறவிருந்த கருத்தரங்கு, எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது. (த-152)

## குடாநாட்டில் புதுவித காய்ச்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். குடாநாட்டில் தற்போது டெங்கு காய்ச்சலை போன்றதொரு புதுவித காய்ச்சல் பரவி வருகிறது.

இக்காய்ச்சல் ஆகக் குறைந்தது மூன்று நாட்கள் வரை நீடிக்கின்றது.

நுளம்பினாலேயே இக்காய்ச்சல் பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

### ஈழ அகதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருந்து புறப்படும் இரண்டாவது கப்பலில் 100 அகதிகளும் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இதற்காக இரண்டு கப்பல்களை தந்துதவுவதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரி திரு. பாரி மத்திய அரசுக்கு உறுதியளித்துள்ளார்.

இந்திய அரசுடனான ஒப்பந்தத்தில் திரு. பாரி கையெழுத்திட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் தற்போது 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)


திருநெல்வேலி
தலங்காவற் பிள்ளையார் கோவில்
வருடாந்த மகோற்சவம்
10 ஆம் திருவிழா
விசேட நிகழ்ச்சியாக:-
★ பட்டிமன்றம் ★
காலம்:- 03 07-1993 சனிக்கிழமை
இரவு 11 மணியளவில்
- நடுவர் -
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்)
விடயம்:
"தன் இனத்துக்காக பெரிதும் தியாகம் செய்த மானவீரன்"
★ அபிமன்யுவே!
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. க. குமாரதாசன்
★ இந்திரசித்தனே!
திரு. தி. திருநந்தகுமார்
திரு. ஆ. திருமுருகன்
★ பானுகோபனே!
திரு. த. சிவகுமாரன்
செல்வன் ஸ்ரீபிரசாந்தன்
10 ஆம் திருவிழா மற்றைய நிகழ்ச்சி விவரம் பின்னர் பிரசுரிக்கப்படும்.
பிரசுர அன்பளிப்பு:-
★ ஆறுமுகம் சிற்பாலயம் ★
காளி கோயில், திருநெல்வேலி.
(சி/5422)



யாழ் இலக்கிய வட்டத்தின்
அனுசரணையுடன்
பெருங்காப்பிய வித்தகர் கவிஞர்
வேலுப்பிள்ளை கனகசபாபதி
ஞாபகார்த்த நினைவரங்கு

இடம் :- அன்னாரின் இல்லம் செம்பியன் ஒழுங்கை (மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கம் இல்லத்திற்கு அருகில், கொக்குவில்)
காலம் :- 03-07-93 சனிக்கிழமை மாலை 3.00 — 6.00 மணி வரை
தலைமை :- து. வைத்திலிங்கம் (தலைவர், யாழ். இலக்கிய வட்டம்)
உருவப்பட திரைநீக்கம்:- பேரவை உறுப்பினர்கள்.
வரவேற்புரை :- ஐயா சச்சிதானந்தம்
நினைவுரை :- அனுவை. நாகராஜன் (அதிபர், தாவடி அ. ம. பாடசாலை)
டொமினிக் ஜீவா (ஆசிரியர் — மல்லிகை)
திரு. எஸ்' சாம்பசிவம்
சபையோர் நிகழ்கால நினைவுகள்
நன்றியுரை குடும்ப அங்கத்தவர்கள்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
107, பருத்தித்துறை வீதி,
யாழ். இலக்கிய வட்ட பேரவை,
யாழ்ப்பாணம்.
(சி/5421)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

## 02-07-1993 வெள்ளிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| நண்பகல். | 12.00 மணி | : | மகேஸ்வரபூசை (அன்னதானம்) |
| மாலை. | 4.30 ,, | : | விசேஷ பூசை |
| ,, | 5.00 ,, | : | பெரியபுராண தொடர் விரிவுரை 'மனத்தினால் முயன்ற கோயில்' |
| ,, | 6.00 ,, | : | பாராட்டு வைபவம் |
| பாராட்டுக்குரியவர் | | : | சிவநெறித் தொண்டர் செ. சத்தியமூர்த்தி அவர்கள் |
| பாராட்டுபவர் | | : | நல்லூர் பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் |
| இரவு. | 6.45 மணி | : | புல்லாங்குழலிசை |

நாதஸ்வரவித்துவான்

| | | |
|---|---|---|
| வி. கே. பஞ்சமூர்த்தி | — | புல்லாங்குழல் |
| வீ. ஆர். இராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| கே. கண்ணதாசன் | — | மிருதங்கம் |
| கே. கணேசன் | — | தவில் |
| எஸ். வேல்மாறன் | — | கடம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(26326) பரிபாலனசபை

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா சண்முகம்

(முன்னாள் நவாலி அட்டகிரி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவர்)

பொன்னையா சண்முகம் அவர்கள் 01-07-93 வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகலட்சுமி, கணேசபிள்ளை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற ஞானசுந்தரியின் அன்புக் கணவரும், கமலநாதன் (மலிகன் லிமிட்டெட்), சிவகுமாரன் (ஸ்கைரே எலக்ரோனிக்ஸ்), மீனா, குகதாசன், மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்நாதன், பத்மாசினி, சிறியலதா, ஜெகதாம்பிகை வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்கந்தரூபினி, சசிகலா, கஜானந்தன், வாகீசன், சாரங்கன், சாமினா, புவனா, கஜரூபி ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்!
திருமதி மீனா செந்தில்நாதன்.
(மகள்)

பக்கர்ஸ் லேன்,
மானிப்பாய். (26324)

## கந்தையா சிவப்பிரகாசம்

[இளைப்பாறிய ஆசிரியர்]

மண்டைதீவு கிழக்கு, கந்தையா சிவப்பிரகாசம் 20-05-93 வியாழக்கிழமை 4 மணியளவில் மண்டைதீவில் காலமானார். இவர் புங்குடுதீவு ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி வைரவநாதர், திருமதி செல்லத்தம்பி, திருமதி மகாதேவா ஆகியோரின் சகோதரரும், சுவிஸைச் சேர்ந்த சிவகுமார், சிறிகுமார், சந்திரகலா, ஜெயகௌரி, சசிகுமார் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயகுமார் ஆகியோரின் தகப்பனாரும், திரு. மகாதேவாவின் (அதிபர் தொண்டர் வித்தியாலயம், கொழும்பு) மைத்துனரும் ஜானகி, பத்மாவதி, சுதாகரன், முத்துலிங்கம், கங்காதரன், மதுசூதனன், பரமநாதன், தர்மராஜா, நாகரத்தினம், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ரகிதா, ஆதவன், அபிநயா ஆகியோரின் பேரனாருமாவார். இவரின் ஈமச்சடங்குகள் மண்டைதீவில் நடைபெற்றன.

தகவல்!
திருமதி ஜெயலட்சுமி சிவப்பிரகாசம்
(மனைவி)

9, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (26319)

## செல்வி. மாட்டின் மேரி ஸ்ரெலா

செல்வி. மாட்டின் மேரிஸ்ரெலா இத்தாலியில் 29-6-93 இல் காலமானார்.

இவர் 15 A, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியைச் சேர்ந்த கபிரியேல் மாட்டின் (இளைப்பாறிய ஆசிரியர்) மாட்டின் திரேசம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும், அரியநாயகம், செல்வநாயகம் (மக்கள் வங்கி), யசிந்தா, மெற்றில்டா, பிறான்சீஸ்கா (டென்மார்க்), கொண்செப்ரா (டென்மார்க்), இராசநாயகம் (இத்தாலி), மதுரநாயகம் (இத்தாலி), சவுந்தரநாயகம் (இத்தாலி) ஆகியோரின் அன்பு சகோதரியும், பூஸ்ரெலா (மல்லிகா) மாலா, செல்வராசா (பொது முகாமையாளர்), ஜீவரெட்ணம் (சுகாதார பரிசோதகர்), ஜெயராசா (டென்மார்க்), ஜெயறாஜ் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும், யசோ, ஜீன், சுபோ, பிரியா, அஜந்தன், சிறாணி, டினேஷ், நிஷாந், றொசாணி, ஜெனி, துஷ்யந், விஜஜன் ஆகியோரின் அன்ரரவுமாவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
க. மாட்டின்
(தகப்பன்)

15, A, ஈச்சமோட்டை.
(26327)

# இன்று ஒலிநாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கரும்புலிகள்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலா சபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடும் கலைஞர்களைக் கௌரவித்தல் நிகழ்வும், வெளியிடப்படும் 'கரும்புலிகள்' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் மதிப்புரைகளும் இடம்பெறும்.

# கவிஞர் நினைவரங்கு

பெருங்காப்பிய வித்தகர் கவிஞர் வேலுப்பிள்ளை கனகசபாபதி ஞாபகார்த்த நினைவரங்கு நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் அனுவை நாகராஜன், டொமினிக்ஜீவா, ஐயா சச்சிதானந்தன் உட்பட பலர் கருத்துரை வழங்குவார்கள். அன்னாரது உருவப் படமும் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். (அ-111)

# சைக்கிள் திருடன் பிடிபட்டான்

குருநகர், ஜூலை 2

யாழ். பழைய பஸ் நிலையத்தில் வைத்து சைக்கிள் ஒன்றை திருடிக் கொண்டு ஓடிய ஒருவனை காவல்துறையினர் பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்தனர்.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

## அராலிப்...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

உணவு முத்திரையே வழங்கப்படும் என்று பிரதேச செயலாளர் தம்மை செவ்வாய்க்கிழமை சந்தித்த மக்கள் தூதுக்குழுவிடம் தெரிவித்திருந்தனர். அதனைத் தொடர்ந்தே மீண்டும் மறியல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நிவாரணம் மீண்டும் வழங்கப்படும் வரை தமது மறியல் போராட்டம் தொடரும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (அ-12)

## கேரதீவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றது.

கேரதீவு இறங்கு துறைப் பகுதியை நேற்று பார்வையிட்ட அகதிகளுக்கான ஐ நா தூதரக அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை 10 மணியளவில் கேரதீவுக்குச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் விசேட பாதுகாப்புடன் அங்கு சென்ற ஐ. நா. அதிகாரிகள் அங்கு சுமார் ஒரு மணி நேரம் தங்கி சேதங்களைப் பார்வையிட்டனர்.

கேரதீவுப் பகுதியை நேற்றுக் காலை தாக்குதலற்ற பகுதியாகப் பிரகடனம் செய்து, ஐ. நா. கொடியுடன் அவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

இதற்கிடையில் —

அகதிகளுக்கான ஐ. நா தூதரக அதிகாரிகள் இன்று காலை அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பர் அதன் பின்னர் அவர்கள் இன்று மாலை பருத்தித்துறை ஊடாக கொழும்பு திரும்புவர். (ஓ-1)

# தமிழக நிலைமையை ஆராய பைலட் சென்னை வருகிறார்

சென்னை, ஜூலை 2

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு பேணப்படுவது குறித்து ஆராய மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் இன்று சென்னைக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டது.

திரு. பைலட், முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து மாநில நிலைவரம் பற்றி விவாதிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன் செயல்களினால் உழைப்பாளரை இழந்தோர் / அங்கவீனமானோர் ஆகியோர்களுக்கான

# வேலைத்திட்டம்

நல்லூர்/கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவில் வன்செயல்களினால் உழைப்பாளரை இழந்து, விதவைகள் ஆக்கப்பட்டோர் / உழைப்பாளர் அங்கவீனமாக்கப்பட்டோருக்குமான வேலைத்திட்டத்தில் எம்முடன் பங்குபற்றாதோர் உடனடியாக றெட்பானா, 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

திட்ட இணைப்பாளர்,
றெட்பானா,
15, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(26322)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா தியாகராசா

(இளைப்பாறிய அதிபர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை)

பொன்னையா தியாகராசா 29-6-93 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னையா சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும், தேவராசா பொன்னம்மா தம்பதிகளின் மருமகரும், செல்வராணியின் அன்புக் கணவரும், ரவீந்திரன் ஆசிரியர் (சுவிஸ்), கலைவாணி, சாந்தினி (கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் தந்தையும், மகாலிங்கம், (ஜேர்மனி), கோகிலவாணி ஆகியோரின் மாமனாரும், இலக்கியா, டிவன்யா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தாவடி மயானத்தில் 30-06-93 இல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

தகவல்!
பொ. நடராசா
(இளைப்பாறிய அதிபர்)
சகோதரன்

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (26328)

## தம்பாபிள்ளை பொன்னம்பலம்

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பாபிள்ளை பொன்னம்பலம் 01-7-1993 (வியாழக்கிழமை) அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொ. சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பொ. கமலநாதனின் (தயன் அரிசி ஆலை உரிமையாளர்) அன்புத் தந்தையும், க. மல்லிகாதேவியின் அன்பு மாமனாரும், க. கஜன் (யாழ். பரியோவான் கல்லூரி) க. தயன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01-07-1993 அன்று பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கஜன்

83 A, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம். (26332)

## திருமதி கந்தையா பாக்கியம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா பாக்கியம் 1-7-93 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் கந்தையாவின் அன்பு மனைவியும், திருமதி ராஜேஸ்வரி திருச்செல்வம் (மலேசியா), காலஞ்சென்ற பேரின்பராஜா (U.K), நவநீதராஜா (U.K), இராஜகுலேந்திரன் (U.K), திருமதி புவனேஸ்வரி அருள்வேல் U.K), திருமதி கமலேஸ்வரி யோகநாதன், திருமதி நிர்மலாதேவி கிருபாநிதி (Norway) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வம், லோகாம்பிகை, தங்கேஸ்வரி, நிர்மலாதேவி, அருள்வேல், யோகநாதன், கிருபாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 2-7-93 இன்று கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி, "மதன்மால்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் இருபாலை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. யோகநாதன்
(மருமகன்)

இருபாலை. (26331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.